**2026 ஏப்ரல் மாதம் 21– ஆம் தேதி செவ்வாய்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 131/2025**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 131/2025 | பெயர்: சுதா<br>க/பெ.சுந்தர் | PW2 | 21.04.2026 |

**சாட்சி M.P. 2/2026 மனு 23.03.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டதின்பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. எனது தம்பி ஈஸ்வரனுக்கும் எனக்கும் சுமூகமான உறவு என்றால் சரிதான். எனது குடும்ப சம்பந்தமான விசயங்களை அவருடன் பகிர்வது வழக்கம் என்றால் சரிதான். அவரும் எனது வீட்டிற்கு வந்து செல்வார் என்றால் சரிதான். எனது குடும்ப சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை அவருடன் பகிர்ந்து கொள்வேன் என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்பந்தமாக எனது தம்பி ஈஸ்வரனிடம் எப்போவாவது சொல்லிள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவருடன் தான் எனது தாய் மற்றும் தந்தை வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்பந்தமாக எனது தம்பி வந்து பேசினாரா என்றால் பேசியுள்ளார்.

2. சம்பவத்திற்கு 2, 3 நாட்களுக்கு முன்பு பிரச்சனை சம்பந்தமாக எனது தம்பி ஈஸ்வரினிடம் சொல்லி அவர் என் வீட்டிற்கு வந்தாரா என்றால் இல்லை. சாட்சி ராஜேந்திரன் மகன் சதீஷ், தம்பி ஆண்டி ஆகியோர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படியார்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்பந்தமாக அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வந்தார்கள் என்றால் இல்லை. சாட்சி ராஜேந்திரன் மகன் சதீஷ், தம்பி ஆண்டி ஆகியோர்கள் ஒன்றாக வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை, தனித்தனியாக வசித்து வருகிறார்கள்.

3. சாட்சி ராஜேந்திரனுக்கு தகவல் சொன்ன சமயத்தில் சாட்சி சதீஷ் மற்றும் ஆண்டிக்கு தகவல் சொல்லப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. சாட்சி ராஜேந்திரன் இருச்சக்கர வாகனத்தில் வந்தாரா என்றால் அவரால் நடக்க முடியாது என்பதால் எனது கணவர் அவரை இருச்சக்கர வாகனத்தில் அழைத்து வந்தார். சாட்சி ராஜேந்திரன் வண்டியில் ஏறவும், இறங்கவும் உதவி தேவைப்படும் என்றால் சரியல்ல, கொஞ்சம் தாங்கி, தாங்கி நடப்பார். சாட்சி ராஜேந்திரன் நேரடியாக எதிரி ராஜேந்திரன் வீட்டின் முன்பு இறங்கினார் என்றால் இல்லை, எனது வீட்டில் இறங்கி எதிரிகள் வீட்டிற்கு நடந்து சென்றார்.

4. சாட்சி ராஜேந்திரன் வரும்வரை நான் எதிரிகள் யாரையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, ஜன்னல்வழியாக அவர்கள் சத்தம் போட்டுக்கொண்டிருந்ததை பார்த்தோம். எங்களுக்குள்ள நிலம் விற்றது சம்பந்தமாக போலீசார் இடத்தின் பத்திரத்தை பார்த்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நிலம் விற்பனை செய்யப்பட்ட பத்திரம் பதிவு செய்யப்பட்ட பத்திரம் என்றால் சரிதான். அந்த பதிவு பத்திரத்தில் நான் விற்பனை செய்த இடத்திற்கு நான்குமால்கள் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தின்படி வடக்குப் பகத்தில் எனக்கு இடம் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டின் அருகில் வடக்குப் பக்கத்தில் எனக்கு இடம் இல்லை என்றாலும், அதனால் பத்திரம் மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

5. வழக்குச் சம்பந்தமாக என்னை போலீசார் எங்கு வைத்து முதன் முதலில் பார்த்தார்கள் என்றால் க.விலக்கு அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தார்கள். போலீசார் மருத்துவமனையில் என்னை பார்க்கும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் தெரியவில்லை. சம்பவத்திலிருந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் என்னை பார்த்தார்கள் என்றால் சுமார் 2 நாட்கள்

இருக்கும். அதன்பிறகு போலீசார் என்னை பார்க்கவில்லை என்றால் சரியல்ல, வீட்டிற்கு வந்து பார்த்தார்கள். மருத்துவமனையில் பார்த்ததற்கு பின்பு எத்தனை நாட்கள் கழித்து வீட்டில் வைத்து போலீசார் பார்த்திருப்பார்கள் என்றால் 5, 6 நாட்கள் இருக்கும்.

6. மருத்துவமனையில் முதன் முதலில் போலீசார் என்னை பார்த்தப்போது எனது மகன் என்னுடன் இருந்தாரா என்றால் மருத்துவமனையில் இல்லை, சிறிது தூரம் தள்ளி இருந்தார். போலீசார் எனது மகனை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்களா என்றால் எனது மகனை கேட்க வேண்டும், எனக்கு தெரியவில்லை. மருத்துவமனையில் என்னை பார்த்தது சார்பு ஆய்வாளரா என்றால் இல்லை, காவல்துணைக் கண்காணிப்பாளர் ஆவார். என்னை மருத்துவமனையிலும், வீட்டிலும் விசாரித்தது, நான் சொன்னதை எழுதிக்கொண்டார்களா என்றால் நான் சொன்னேன், எழுதிக்கொண்டார்களா என்று எனக்கு தெரியாது.

7. எனது தந்தை மற்றும் எனது கணவரின் இறுதிச் சடங்கில் நான் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. எனது தந்தை மற்றும் எனது கணவரின் இறுதிச் சடங்கில் எனது மகன் கலந்து கொண்டாரா என்றால் எனக்கு தெரியாது. நான், எனது மகன் ஆகிய இருவரும் போலீசாரால் பிடித்துவிடுவார்கள் என்பதற்காக தலைமறைவாக இருந்தோம் என்றாலும் அதனால் இறுதிச்சடங்கில் கலந்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை வீட்டில் வைத்து பார்த்தப்போது, என்னை வீட்டிற்குள் வந்து பார்த்தார்கள் என்றால் சரியல்ல, வீட்டு வாசற்படியில் வைத்து பார்த்தார்கள். எனக்கு இரத்தக் காயம் ஏற்பட்ட நிலையில் நான் அணிந்திருந்த உடையில் இரத்தக்கறை இருந்ததா என்றால் இல்லை.

8. நான் காயம்பட்ட இடத்திற்கும், சுந்தர் காயம்பட்ட இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 4 அடி இருக்கும். சுந்தர் மற்றும் எனது தந்தை முத்துமாயன் ஆகிய இருவரும் ஒரே இடத்தில் வைத்து அவர்களுக்கு காயம் ஏற்பட்டதா என்றால் எங்கள் வீட்டின் முன்னர் உள்ள வாசலில் காயம் ஏற்பட்டது. எனது வீட்டிற்கு வடக்குப் பக்கம் அல்லது தெற்கு பக்கம் காயம்பட்டதா என்றால் கிழக்குப் பக்கம் ஆகும். எதிரி பார்த்திபன் தினமும் பிரச்சனை செய்தது சம்பந்தமாக நாங்களும், எங்கள் குடும்பத்தாரும் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, புகார் கொடுக்க முயன்றோம்.

9. சம்பவத்திற்கு முன்பு எந்த தேதியில் நிலம் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்தது என்பது குறித்து போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. பேச்சுவார்த்தை உறவினர்களை வைத்து பேசினோம் என்றால் சரியல்ல, வேறு நபர்களை வைத்து பேசினோம். அவர்கள் வெளியூரை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. அவர்கள் எங்களுக்கு நன்கு தெரிந்தவர்கள் என்றால் எங்கள் தெருவில் இருப்பவர்கள், பஞ்சாயத்து தலைவர் ஆவார், அவர்களை எதிரிகளுக்கும் தெரியும். சம்பவ சமயத்தில் எதிரி பார்த்திபனின் தந்தை 2வது எதிரி ராஜேந்திரன் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு, அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் பக்கத்தில் இருந்தவர்கள் சொல்லி தெரியும்.

10. 2வது எதிரி உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்றால் எனக்கு தெரியாது. சாட்சி ராஜேந்திரனுக்கு கைப்பேசி உண்டா என்றால் இல்லை. எனது வீடு மந்தையம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மந்தையம்மன் கோவில் தெருவில் நிறைய குறுக்குத் தெருக்கள் உள்ளன

என்றால் சரிதான். மந்தையம்மன் கோவில் தெரு 1 கி.மீ. தூரம் வரை செல்லும் தெரு என்றால் நீளமான தெருவாகும். அந்த தெருவில் மேல் தான் எனது வீடு உள்ளது என்றால் சந்துக்குள்ளே உள்ளது. அந்த தெருவிலிருந்து எவ்வளவு தூரத்தில் எனது வீடு உள்ளது என்றால் எத்தனை அடி என்று எனக்கு தெரியவில்லை, சிறிது தூரம் இருக்கும்.

11. மருத்துவமனையில் நான் இருக்கும்போது எனது தாயார், எனது மகள் சுபத்ரா ஆகியோர்கள் என்னை பார்த்தார்கள் என்றால் சரிதான். என்னை மருத்துவமனையில் வைத்து பார்க்கும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் எனது தந்தை மற்றும் எனது கணவரை பிரேத கூறாய்வு முடித்து, பிரேதத்தை கொடுத்தப்பிறகு பார்த்தார்கள். அவர்கள் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. தகவல் சொல்லி அவர்கள் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் எப்படி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு பிறகு அவர்களை நான் அவர்களை மருத்துவமனையில் வைத்து தான் பார்த்தேன் என்றால் சரிதான்.

12. நான் மருத்துவமனைக்கு செல்லும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் எனது வீட்டிலிருந்து ஆம்புலன்ஸ் மூலம் உத்தமபாளையம் மருத்துவமனைக்கு சென்றபோது இரவு சுமார் 11.00 மணி இருக்கும். உத்தமபாளையம் மருத்துவமனை வளாகத்திற்கு பக்கத்தில் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். உத்தமபாளையம் மருத்துவமனை செல்லும்போதே எனது ஊர்க்காரர் கூடிவிட்டார்கள் என்றால் ஒருவர் ஒருவராக வந்து கொண்டிருந்தார்கள். நான் மருத்துவமனைக்கு சென்றவுடனே போலீசார் வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் உத்தமபாளையம் மருத்துவமனைக்கு சென்று எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் சுமார்

கால்மணி நேரம் இருந்தோம், இறந்துபோன எனது கணவர் சுந்தருக்கு அதிக இரத்தப்போக்கு இருந்ததால் க.விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள்.

13. நாங்கள் உத்தமபாளையம் மருத்துவமனைக்கு சென்றபோது மருத்துவர்கள் எங்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது குறித்து கேட்டார்களா என்றால் எனது மகனும் உடன் இருந்தார், எனக்கு தெரியவில்லை. என்னைப் பார்த்து மருத்துவர்கள் எப்படி காயம் ஏற்பட்டது என்று கேட்டார்களா என்றால் கேட்டார்கள். எனது மகனுக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டதா என்றால் எனது கணவரின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்ததால் அவரை பார்த்துக் கொண்டிருந்தேன். உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் நான் இருந்த போது போலீசார் அங்கு வந்தார்களா என்றால் இல்லை. எனது வீட்டிற்கு வடக்குப் பக்கத்தில் ஒரே ஒரு மாட்டுக்கொட்டம் உள்ளது என்றால் சரிதான்.

14. எனது வீட்டிற்கு முன்புறம் திறந்தவெளி என்றால் சரிதான். எனது வீட்டின் எதிர்புறத்தில் வேலி போடுவதற்காக கற்கால்கள் ஊன்றப்பட்டிருந்தது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வாகனங்கள் வரும்வேண்டும் என்றால் மந்தையம்மன் கோவில் தெருவில் வாகனத்தை நிறுத்தி நடந்து வரவேண்டும் என்றால் சிறிய வகை வாகனங்கள் வர இயலும், பெரிய வாகனங்கள் கொஞ்சம் சிரமப்பட்டு வரும். ஆம்புலன்ஸிற்கு தகவல் சொன்னது யார் என்றால் எனக்கு தெரியாது, பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள். ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்னர் சம்பவ இடத்திற்கு ஊர்க்காரர்கள் வந்துவிட்டார்கள் என்றால் ஒரு ஒருவராக வந்து கொண்டிருந்தார்கள். ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்பே வந்து விட்டார்கள் என்றால் அவர்கள் தான் ஆம்புலன்ஸிற்கு தகவல் சொன்னார்கள்.

15. சம்பவ நாளன்று இரவு 9.00 மணிக்கு தூங்கிவிட்டோம் என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள நிலையில், இரவு எத்தனை மணிக்கு உணவு உண்டோம் என்றால் சுமார் 8 மணி இருக்கும். நான் வீட்டிற்கு வந்த பிறகு வீட்டை ஒட்டியுள்ள தகர ஷீட்டுகள் என்ன ஆனது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் எங்கள் வீட்டிலிருந்து சற்று தூரத்தில் தகர ஷீட்டு உள்ளது, அதற்கும் சம்பவ இடத்திற்கும் சம்பந்தமில்லை, அந்த தகர ஷீட்டுகள் முன்பு எப்படி இருந்ததோ, அப்படியே பார்த்த மாதிரியே இருந்தது. அந்த தகர ஷீட்டுகளுக்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் 10, 15 அடிக்கு மேல் இருக்கும். சாட்சி ராஜேந்திரன் எங்கள் வீட்டிற்கு வரும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் சுமார் 9.30 மணி இருக்கும், சாட்சி மீண்டும் 10.00 மணி நெருக்கத்தில் இருக்கும் என்று கூறுகிறார்.

16. போலீசார் என்னை விசாரிக்கும்போதும், நீதிபதியிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் சம்பவ இடத்தில் எனது மகன் என்ன செய்து கொண்டிருந்தார் என்று சொன்னேனா என்றால் சண்டையை விலக்க சென்றபோது எனது தாயார் அவரை தடுத்து நிறுத்த முயற்சித்தார், 1வது எதிரி எனது மகனின் காதை கடித்துவிட்டார். எனது மகன் சம்பவ சமயத்தில் மேல்சட்டை அணிந்திருந்தாரா என்றால் அணிந்திருந்தார். காதை கடித்தப்போது இரத்தம் வந்ததா என்றால் எனக்கு தெரியவில்லை. போலீசார் விசாரணையில் அனுமந்தன்பட்டியில் பள்ளமாக உள்ள இடத்தை கழித்துவிட்டு மீதமுள்ள 4 சென்ட் இடத்தை வாங்கினார்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன்.

17. பள்ளமாக உள்ள நிலத்தை வேண்டுமென்று எங்களிடம் பிரச்சனை செய்து அடிக்கடி சண்டை ஏற்படுத்தி வந்தார்கள் என்றும், வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், அதனால் வாக்குவாதம் தொடர்ந்து கொண்டே இருந்தது

என்றும் போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் சொன்னேன். அதேபோன்று, கொலை நடந்த 4 நாட்களுக்கு முன்பு எதிரி பார்த்திபன் இராணுவத்திலிருந்து வந்து, அடிக்கடி வீட்டிற்கு வந்து, அசிங்கமாக பேசி தகராறு செய்து வந்தார் என்று போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எங்கள் வீட்டை ஒட்டியுள்ள தகர ஷீட்டுக்களை அடித்தார் என்று போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் சொன்னேன்.

18. எனது கணவர் சுந்தர் இரவு நேரங்களில் வெளியில் ஏன் அசிங்கமாக பேசி தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டார் என்றும், தர்மர் மகன் ராஜேந்திரனை அழைத்து வரச் சென்றார் என்று போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் சொன்னேன். 1வது எதிரி பார்த்திபன் எங்கள் வீட்டிற்கு முன்பு வந்து, ஏன்டா தேவுடியா மகனே ஆட்களை அழைத்து வந்து, பேசும் அளவிற்கு நீ பெரிய ஆளா என்று திட்டி எனது கணவரின் நெஞ்சில் எட்டி உதைத்து கீழே தள்ளினார் என்று போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் சொன்னேன். எனது கணவர் சுந்ததை சவுக்குக்கட்டையை எடுத்து வந்து அடித்தார், அதனால் முகத்திலும், உதட்டிலும் காயம் ஏற்பட்டது என்று போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் சொன்னேன்.

19. 2வது எதிரி ராஜேந்திரன் ரீப்பர் கட்டையால் எனது கணவர் சுந்தரை அடிக்க வந்தார் என்றும், 3வது எதிரி விஜயா அடிபைப் மற்றும் இரும்பு கம்பியை எடுத்து வந்தார் என்றும், 1வது எதிரி எனது கணவரை அடித்துக்கொண்டிருந்த போது, நானும், எனது தந்தை முத்துமாயனும்

விலக்கவிட சென்றோம் என்றும், 3 வது எதிரி விஜயா அடிபைப்பை எடுத்து வந்து, எனது தந்தை முத்துமாயனை முதுகிலும், உடம்பிலும் மாறி மாறி அடித்தார் என்றும், 2 வது எதிரி ராஜேந்திரன் என்னை தலை, கழுத்து, கன்னம் போன்ற இடங்களில் ரீப்பர் கட்டையால் மாறி மாறி அடித்ததால் எனக்கு முகம், தலையில் இரத்தக்காயமும், கழுத்தில் ஊமைக்காயமும், வலது கன்னம், இடது தோள்பட்டை போன்ற இடங்களில் பலதரப்பட்ட காயங்கள் ஏற்பட்டன என்று போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் சொன்னேன்.

20. ரோடு பதிப்பதற்காக பயன்படுத்தப்படும் கல் பெயர் ஹாலோபிளாக் என்றால் எனக்கு தெரியாது, சாட்சி மீண்டும் ஹாலோபிளாக் கல் என்று சொல்வார்கள். ஹாலோபிளாக் கல்லை வைத்து வீடு கட்டுவார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு முன்பகுதியில் உள்ள இடம் எனது சொந்த இடம் என்றால் சரிதான். எனது வீட்டின் வாசலை கடந்து தான் எதிரி பார்த்திபன் வீட்டிற்கு செல்ல வேண்டும் மற்றும் வாகனத்தில் செல்ல முடியும் என்றால் சரிதான். நான் விற்பனை செய்த விற்பனை பத்திரத்தில் எதிரி பார்த்திபனின் போக்குவரத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டை விட்டு இறங்கிய உடனே அந்த பாதை தான் என்றால் சரிதான். அந்த பாதையில் தான் நான் சாணி தெளித்து முறைவாசல் செய்வேன் என்றால் சரிதான்.

21. எனது சந்தில் ஆட்டோ வரும் என்றால் சரிதான். சம்பவத்தன்று அந்த சந்தில் ஆட்டோ வந்தது என்றால் இல்லை. எனது வீடு மற்றும் வீட்டின் அருகில் உள்ளவர்கள் ஆட்டோ வைத்து ஓட்டி வருகிறார்கள் என்றால் மந்தையம்மன் கோவில் ரோட்டிற்கு கொஞ்சம் தள்ளி உள்ளது. போலீசார் விசாரணையில் தெருவில் பதிக்கும் ஹாலோபிளாக் கல்லை எடுத்து எனது

தந்தையின் மண்டையில் போட்டுவிட்டார் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் விசாரணையில் எனது கணவர் சுந்தரின் தலையில் மாறி மாறி 4, 5 முறை வெட்டினார் என்றும், வெட்டும்போது 2வது எதிரி ராஜேந்திரன் சுந்தரின் வாயை பொத்திவிட்டார் என்று போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் சொன்னேன்.

22. வாயைப் பொத்தும்போது எனது கணவர் நின்று கொண்டிருந்தாரா அல்லது கீழே இருந்தாரா என்றால் கீழே விழுந்துவிட்டார். வாயை பொத்தும்போது இரண்டு கையால் பொத்தினாரா என்றால் தெரியவில்லை. வாயை பொத்தியவர் அவர் மேல் அமர்ந்து வாயை பொத்தினாரா, தலை பகுதியில் இருந்து வாயை பொத்தினாரா என்றால் குனிந்து கொண்டு வாயை பொத்தினார். குனிந்து வாயை பொத்தும்போது எனது கணவர் சுந்தரின் தலை அவரின் கால் அருகே இருந்ததா என்றால் குனிந்து கொண்டு பொத்தினார். விஜயா அடிபைப்பால் சுந்ததை அடித்ததில் இரண்டு கைகளும் உடைந்து கீழே சாய்ந்துவிட்டது என்று போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் சொன்னேன்.

23. பொருட்களை வீட்டிற்குள் வைத்துவிட்டு ஓடிவிட்டார்கள் என்று போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். சான்று பொருட்களை முதன்முறையாக நீதிமன்றத்தில் தான் பார்த்தேன் என்றால் சரியல்ல, சம்பவ இடத்தில் வெட்டும்போது பார்த்தேன். போலீசார் விசாரணையில் நான் பார்த்தப் பொருட்கள் குறித்து தனிப்பட்ட குறிப்பை குறித்துக் கேட்டார்கள் என்றால் கேட்டார்கள். நானும், அடையாளங்களை சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு கத்தி, பட்டாக்கத்தி, வாள் ஆகியவற்றிற்கான வித்தியாசம் தெரியும் என்றால் தெரியும். வாள் என்பது நுனி

கூர்மையான மையத்தில் வளைவாக ஒல்லியாக இருக்கும் என்றால் சரிதான். பட்டாக்கத்தி என்பது பட்டையாக ஒரே மாதிரி நேராக இருக்கும் என்றால் நுனி மேல்நோக்கி பார்த்தவாறு இருக்கும். பட்டாக்கத்தியின் தடிமன் ஒரே மாதிரியாக இருக்கும் என்றால் தெரியவில்லை.

24. நான் 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்றதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ரீப்பர் கட்டை, சவுக்குக்கட்டை ஆகியவற்றை போட்டுவிட்டு போனதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எனது கணவர் மற்றும் எனது தந்தை ஆகியோர்கள் என்ன மாதிரியான உடை அணிந்தார்கள் என்று போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொன்னவாறு சொன்னவிதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான், எனது மகன், எனது கணவர், எனது தந்தை அனைவரும் சேர்ந்து எதிரிகளை அடித்து அவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், அதன்பின்பு ஊர்காரர்கள் தலையீட்டின்பேரில் எதிரிகள் காப்பாற்றப்பட்டு, அதன்பிறகு ஏற்பட்ட கலவரத்தில் தான் எனது கணவருக்கும், எனது தந்தைக்கும் காயம் ஏற்பட்டது என்றாலும், அதன் கலவரத்திலிருந்து தப்பிப்பதற்காக நானும், எனது மகனும் தலைமறைவாகி இருந்தோம் என்றால் சரியல்ல.

25. எனது கணவர் மற்றும் எனது தந்தை ஆகியோர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் எனது தாயாரும், மகளும் தகவல் அறிந்து மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றாலும், அதை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. அவர்கள் மருத்துவமனைக்கு வந்த பின்பு சாட்சி ராஜேந்திரன் மற்றும் எனது உறவினர்களின் தூண்டுதலின்பேரில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் இடம் பிரச்சனை

சம்பந்தமாக பிரச்சனை இருந்ததில்லை என்றாலும், சம்பவத்தன்று எதிரிகள் என் வீட்டின் முன்பு வந்து பிரச்சனை செய்யவில்லை என்றால் தவறு.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 21.04.2026 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.21 17:26:18 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
21.04.2026